**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக் கிழமைப் பிரசங்கம்**
**27 மார்ச் 2020 / 02 ஷஃபான் ஹிஜிரி 1441**

# <u>அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நன்றி தெரிவிப்பது</u>

**الحَمْدُ لِلَّهِ الَّذِي خَلَقَ الإِنسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ، وَأَمَرَنَا بِالتَّقْوَى وَالخُلُقِ الكَرِيمِ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّم عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ.**

**أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُسْلِمُونَ.**

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமக்கு வழங்கியுள்ள எண்ணற்ற அருட்கொடைகளுக்காக அல்லாஹ்வின் மீது ”தக்வா” (பக்தியை) ஏற்படுத்திக் கொள்வோமாக! நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு கஷ்டத்திலும் எண்ணற்ற அருட்கொடைகள் உள்ளன. அவற்றுக்காக நாம் நன்றி செலுத்துவது அவசியமாகும். நமது அன்றாட வாழ்க்கையில் அல்லாஹ்வுக்கு நாம் எவ்வாறு நன்றி தெரிவிப்பது? எனும் கேள்வி இங்கு எழுகிறது. அதற்கான பதிலை இங்கு நாம் அறிய உள்ளோம்.

இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் பின்வரும் கருத்துக்களைக் கூறுகிறார்கள்: அல்லாஹ்வை வணங்கும் மக்கள் மூன்று வகையினராக உள்ளார்கள். **முதல் வகையான மக்கள்** அல்லாஹ்வை அவர்கள் பயந்து கொள்வதன் காரணமாக அல்லாஹ்வை வணங்குகிறார்கள். இது, எஜமானுக்குப் பயந்து வணங்கும் ஒரு அடிமையின் வணக்கத்தைப் போன்றதாகும்.

**இரண்டாவது** வகையான மக்கள், அல்லாஹ்விடம் வெகுமதியை எதிர்பார்த்து வணங்குபவர்கள் ஆவர். இவர்களின் வணக்கமானது, ஒரு வியாபாரி அதிகமான இலாபம் கிடைக்கும் எனும் எதிர்பார்ப்பில் தனது பணத்தைச் செலவழிப்பது, முதலீடு செய்வது போன்றதாகும்.

**மூன்றாவது** வகையான மக்கள், பரிசுத்தமான உள்ளத்துடன் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் வணங்குபவர்கள் ஆவர். தமது வணக்கங்கள் எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும், எவ்வளவுதான் சிறப்பாக இருந்தாலும் அவற்றின் மூலம் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தி விட்டதாக ஆகாது என அவர்கள் உணர்கின்றனர். அவ்வாறு அவர்கள் உணர்வதால், அல்லாஹ்வைத் திருப்திப்படுத்துவதற்காக மட்டுமே அவர்கள் அல்லாஹ்வை வணங்குகிறார்கள். எனது சகோதரர்களே! இதுதான், வணக்கத்தில் மிகச் சிறந்ததாகும். இவ்வகையான வணக்கம்தான் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் வணக்கமாக இருந்தது. இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மனைவி செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள்: அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் உங்களின் முன், பின் பாவங்களை மன்னித்து விட்ட நிலையில் ஏன் இவ்வாறு கால்கள் வீங்கும் அளவுக்கு நீங்கள் வணங்க வேண்டும் எனக் கேட்ட போது, இறைத்தூதர்(ஸல்) அவர்கள்: "நான்

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அடியாராக ஆக வேண்டாமா?” என பதில் கூறினார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

கோவிட்- 19 காய்ச்சல் மனிதகுலத்தின் மன உறுதிக்கு எதிரான மிகக் கடுமையான சோதனையாக உள்ளது. இருந்த போதிலும், அது அல்லாஹ்வுடைய ஆழமான அறிவு ஞானத்தையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. விஷயம் எவ்வாறிருந்தாலும் அல்லாஹ்வுக்கு நாம் நன்றி செலுத்துபவர்களாகவே உள்ளோம். நாம் சகிப்புத்தன்மையில் விடா முயற்சியுடன் இருப்பதானது அல்லாஹ்வுக்கு நாம் நன்றி செலுத்து வதற்கான அடையாளமாக உள்ளது. அல்லாஹ்வின் முன்னிலையில் நம்மை நாம் தாழ்த்திக் கொள்கிறோம். அல்லாஹ்வுக்காக நம்மை அர்ப்பணித்துக் கொள்கிறோம். அல்லாஹ்விடம் நமது பாவங்களை நினைத்து வருந்துகிறோம். இம்மாபெரும் சோதனையை வெற்றிகொள்ள அவனிடமே உதவி தேடுகிறோம். நமது நற்காரியங்களை அதிகரித்துக் கொள்வதற்கான வழிமுறைகளில் சில இவைகளாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ﴿١١﴾

பொருள்: (நபியே!) உம்முடைய இறைவனின் அருட்கொடையைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவித்துக் கொண்டிருப்பீராக! (அத்தியாயம்: அள்ளுஹா, வசனம்: 11)

ரமதான் மாதம் நெருங்கி வரும் வேளையில், அல்லாஹ் மற்றும் அவனது படைப்புகளுடனான நமது தொடர்பைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு முன்பு நாம் தெரிவித்துள்ளது போல் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கு இது தகுந்த காலம் ஆகும். நமது வணக்க வழிபாட்டுச் செயல்பாடுகளுக்கு தற்காலிகமாக சில தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், இந்நிலையானது, நம்மை நாம் அல்லாஹ்வுக்கு அரிப்பணித்துக் கொள்வதையோ, அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதையோ நிறுத்தி விடாது. அல்லாஹ் தனது அடியார்களுடன் எப்போதும் நெருக்கமாக உள்ளான். எந்த சூழ்நிலையும் அல்லாஹ்வுடனான நமது உறவை மாற்றி விட முடியாது. நாம் அனைவரும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக் கொள்வோமாக! நன்றி செலுத்தும் கலாச்சாரத்தை அதிகரித்துக் கொள்ளுமாறு நமது குடும்பத்தார்கள், நண்பர்கள் மற்றும் சமுதாய மக்களிடம் ஆர்வமூட்டுவோமாக! இன்ஷாஅல்லாஹ்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.